<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>
<u>அ.வ.எண்.66/2019</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | போதம்மாள் | தொழில் | |
| கணவர் பெயர் | முருகன் | வகுப்பு | --- |
| வயது | | சமயம் | --- |
| நாள் | 25.03.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.3 | | |

இன்று 25.03.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>:-

1) நான் கடந்த 12.09.2022ம் தேதியிலிருந்து குட்டப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் அதில் கண்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்களுடன் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

2) குட்டப்பட்டி கிராம சர்வே எண்.362/2 ல் உள்ள பு.ஹெ.0.85.5 நிலத்தில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 2.11 ஏக்கர் நிலமானது யாருடைய பெயரில் உள்ளது என்றால், தற்போது லேட் வரதராஜன் மனைவி குமுதவள்ளி, லேட் வரதராஜன் மகன் சேர்வராயன், லேட் வரதராஜன் மகன் தமிழ்செல்வன், லேட் வரதராஜன் மகள் கோமதச்செல்வி ஆகியோர்கள் பெயரில் கூட்டாக பட்டா எண்.3452 ல் தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி பட்டா மாறுதல் கடந்த 18.02.2022ம் தேதியில் T.R.2022/0103/08/292952 வட்டாட்சியர் நடவடிக்கைகளின் படி மாற்றப்பட்டுள்ளது.

3) மேற்படி நிலத்திற்குரிய பட்டாவானது லேட் வரதராஜன் பெயருக்கு எப்போது மாற்றப்பட்டது என்றால், கடந்த 19.02.1998ம் தேதியில் T.R. 310/97-98

வட்டாட்சியர் நடவடிக்கைகளின்படி மாரிமுத்து கவுண்டர் மகன்கள் நராயணன், சின்னையண்ணன் ஆகியோர்கள் பெயரிலிருந்து மேற்படி வரதராஜன் பெயருக்கு பட்டா எண்.1215 ன் மூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

4) அழைப்பாணை கிடைக்கப்பெற்றவுடன் தாவா சொத்தை நேரில் பார்வையிட்டேன். தாவா சொத்தில் ஆழ்துளைகிணறு, அட்டை வீடு, மாட்டு கொட்டகை ஆகியவை அமைந்துள்ளது. வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை மேற்படி லேட் வரதராஜனின் மனைவி மற்றும் மக்களின் பெயர்களில் தான் பதிவாகியுள்ளது.

5) குட்டப்பட்டி கிராம சர்வே எண்.362/2 ல் உள்ள பு.ஹெ.0.85.5 நிலத்தில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 2.11 ஏக்கர் நிலம் மற்றும் குட்டப்பட்டி கிராம சர்வே எண்.362/3 ல் உள்ள பு.ஹெ.0.39.5 நிலத்தில் 0.98 செண்ட் நிலம் ஆகியவற்றிற்குரிய கிராம சிட்டா, அடங்கல், அ–பதிவேடு, புலவரைபடம் ஆகியவற்றிற்கான சான்றுநகல் வாதி தரப்பு மூன்றாம் நபர் சாட்சியின் சான்றாவணமாக **சா.சா.ஆ.1 (Ex.X.1 series)** கோர்வையாக குறியீடு செய்யப்படுகிறது.

6) குட்டப்பட்டி கிராம சர்வே எண்.362/3 ல் உள்ள பு.ஹெ.0.39.5 நிலத்தில் 0.98 செண்ட் நிலமானது, லேட் வரதராஜன் மனைவி குமுதவள்ளி, லேட் வரதராஜன் மகன் சேர்வராயன், லேட் வரதராஜன் மகன் தமிழ்செல்வன், லேட் வரதராஜன் மகள் கோமதச்செல்வி ஆகியோர்கள் பெயரில் கூட்டாக பட்டா எண்.3452 ல் தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி பட்டா மாறுதல் கடந்த 18.02.2022 ம் தேதியில் T.R.2022/0103/08/292952 வட்டாட்சியர் நடவடிக்கைகளின் படி மாற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலமானது லேட் வரதராஜன் பெயருக்கு பட்டா மாறுதல் ஆவதற்கு முன்னிட்டு கவுண்டப்ப கவுண்டர் மகன் மாரிமுத்து என்பவரது பெயரில் பட்டா எண்.821 ல் தாக்கலாகியிருந்தது. மேற்படி

நிலத்தில் குடியிருப்பு பகுதிகள் எதுவும் இல்லை தரிசாக உள்ளது. வருவாய் துறை ஆவணங்களின்படி மேற்படி நிலங்கள் லேட் வரதராஜனின் மனைவி மற்றும் மக்களின் பெயர்களில் உள்ளது.

7) மேற்படி இரண்டு நிலங்களுக்கும் வழக்கு நிலுவையிலிருப்பதால், கந்தாயம் வசூலிக்கப்படவில்லை. கந்தாயம் வசூலிக்கக்கூடாது என கிராம நிர்வாக அலுவலகத்திற்கு ஏதேனும் ஆட்சேபனை அனுப்பப்பட்டுள்ளதா என்றால், நான் 2022ல் கிராம நிர்வாக அலுவலராக பணியேற்றதற்கு பின்னிட்டு அவ்வாறு எதுவும் வரபடவில்லை. மேற்படி இரண்டு நிலங்களிலும் மண் அள்ளப்பட்டதாக ஏதேனும் புகார்கள் உள்ளதா என்றால், புகார் வரபெற்றது. நான் தாவா சொத்தை பார்வையிட்ட வகையில் அவ்வாறு மண் அள்ளப்பட்டதற்கான சுவடுகள் எதுவும் காணப்படவில்லை.

<u>1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை :-</u>

1) எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் குட்டப்பட்டி கிராம சர்வே எண்கள்.362/2,362/3 ஆகியவற்றிலுள்ள நிலங்கள் தொடர்பாக ஆவணங்களை தாக்கல் செய்யக்கோரி தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். ச.எண்.362/2ல் அட்டை வீடும், மாட்டுக்கொட்டகையும், ஆழ்துளை கிணறும் உள்ளதாக மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

2) தற்போது நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 ஆவணத்தின் கோர்வையில் உள்ள சர்வே எண்.362/2ற்குரிய புலவரைபடத்தில் ஐயனார் கோவில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ஐயனார் கோவில் சர்வே எண்.362/2ல் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. கிராம கணக்குகளில் மேற்படி கோவில் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

3) நான் தாக்கல் செய்துள்ள அ–பதிவேட்டில் சர்வே எண்.362/3 ஆனது, தற்போது வரை கவுண்டப்ப கவுண்டர் மகன் மாரிமுத்துவின் பேரில்தான் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வருவாய் ஆவணப்படி, சர்வே எண்.362/3 ற்கு மேற்படி மாரிமுத்துவின் பெயர்தான் அனுபவதாரராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி லேட் வரதராஜனின் மனைவி மற்றும் வாரிசுகளின் பெயரில் இவ்வழக்கு நிலுவையிலுள்ளபோது தான் பௌதீக அடிப்படையில், பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கில் 1 முதல் 6 மற்றும் 18 வது வரிசைகளை தவிர மற்றவை நிரப்பப்படாமல் உள்ளது என்றால், சரிதான். தேவைப்பட்டால்தான் மேற்படி வரிசைகளில் அதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்படும். மேற்படி அடங்கல் கணக்கில் பயிர் ஆய்வு செய்து, நிலத்தில் என்ன பயில் உள்ளது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். சாகுபடி செய்யப்படாததால், குறிப்பிடப்பட்டிருக்காது.

5) கடந்த 26.02.2024 ம் தேதியில் தாவா சொத்தில் JCB இயந்திரத்தை வைத்து மண் அள்ளுவதாக பதிவு தபால் மூலம் புகார் அனுப்பபட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி பதிவு தபால் கிடைக்கப்பெற்றதற்கு மறுநாள் நான் சென்று தாவா சொத்தை பார்வையிட்டபோது அவ்வாறு மண் அள்ளப்பட்டதற்கான சுவடுகள் எதுவும் இல்லை.

6) மேற்படி புகாரிலேயே சொத்து தொடர்பாக அ.வ.எண்.9/2013 என்ற வழக்கு மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தை எந்த தேதியில் பார்வையிட்டேன் என்றால், கடந்த 22.03.2024 ம் தேதியில் பார்வையிட்டேன்.

7) தற்போது என்னிடம் காட்டப்படும் குறுந்தகடுடன் இணைந்துள்ள புகைப்படங்களில் காணப்படுவது போல்தான் தாவா சொத்தில் மாட்டுக்கொட்டகையும், அட்டை வீடும் இருந்ததா என்றால், ஆமாம். ஆனால், தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் நிலத்தில் வெள்ளை நிறக்கோடுகள் போட்டு பிரிக்கப்பட்டது போல் காணப்படும் அமைப்பு எதுவும் நான் பாவையிட்டபோது நிலையில் இல்லை. மேற்படி குறுந்தகடுடன் கூடிய புகைப்படங்கள் **பி.வா.சா.ஆ.1(Ex.B.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி புகைப்படங்களுக்குரிய இந்திய சாடசிய சட்டம் 1872, பிரிவு 65Bன் கீழான சான்றிதழ் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை.)

8) நீதிமன்றத்திலிருந்து அனுப்பபட்ட அழைப்பாணை அலுவல் வழியாக வட்டாட்சியர் மூலமாகத்தான் எனக்கு சார்வு செய்யப்படும் என்றால், சரிதான். அவ்வாறு ஒரு வழக்கிற்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்படும் பட்சத்தில் மேற்படி தாவா சொத்தை நான் பார்வையிட செல்லவேண்டும் என்றால், வருவாய் நிலையாணைகளின் படி, வருவாய் ஆய்வாளருக்கும், பிர்கா சர்வேயருக்கும் நான் கடிதம் அனுப்பவேண்டும் என்றாலும், அவ்வாறு நான் எவ்வித கடிதங்களும் அனுப்பாமல் தாவா சொத்தை தன்னிச்சையாக பார்வையிட்டது தவறானது என்றாலும், சரியல்ல.

9) அவ்வாறு தலஆய்வு செய்யும் பொழுது புலவரைபடத்தில் இல்லாத கட்டமைப்புகள் தாவா சொத்தில் அமைந்திருந்தால், அது தொடர்பாக நில அளவையர் சிகப்பு மையினால் மேற்படி சொத்து அமைந்துள்ள சர்வே எண்ணிற்குரிய புல வரைபடத்தில் குறித்துக்கொண்டு, அது தொடர்பாக அறிக்கையை வட்டாட்சியருக்கும், நீதிமன்றத்திற்கும் அளிக்கவேண்டும் என்றால், வழக்கு நிலுவையிலிருக்கும் பொழுது அவ்வாறு எவ்வித

மாறுதல்களும் செய்யமாட்டார்கள்.

10) சர்வே எண்கள்.362/2, 362/3 ஆகியவற்றில் என்ன வகையான மரவகைகள் இருந்தது என்றால், தென்னை மரங்கள், பனைமரங்கள், பாலமரம் ஆகியவை இருந்தது. மேற்படி மரவகைகள் குறித்து அடங்களில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால், குறைந்தது 2-1/2 சென்டிற்கு மேல் மரங்கள் வைக்கப்பட்டிருந்தால்தான் அடங்களில் குறிப்பிடப்படும்.

11) பொதுவாக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்படும் பட்சத்தில் அதனை முப்படிகள் எடுத்துக்கொண்டு தாவா சொத்தை வருவாய் ஆய்வாளர் மற்றும் நிலஅளவையருடன் சேர்ந்துதான் நான் பார்வையிட்டு சாட்சியம் அளிக்க இயலும் என்றாலும், இவ்வழக்கில் நான் மேற்கண்ட சட்ட நடைமுறைகள் எதையும் பின்பற்றாமல், தாவா சொத்தை பார்வையிட்டு அதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

12) நான் புகார் அளித்தவுடன் செல்லாமல் மறுநாள் சென்றதால்தான் மேற்படி மண் அள்ளப்பட்டதற்கான சுவடுகள் எதையும் என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால், சரியல்ல. ச.எண்கள்.362/2, 362/3 ஆகியவற்றில் மரங்கள் உள்ளதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.